# ஜாமக்காரன்

# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 6 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 3**

**MARCH 2022 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com

ஜாமக்காரன் JAMAKKARAN



கர்த்தருக்குள் அன்பானவர்களே !

வாழ்த்துகிறேன்

கிருஸ்துவின் பாடு மரனங்களை குறித்து வழமையாக பாரம்பரியான முறையில் சிந்திக்கிறேன். கூட்டங்களை ஏற்பாடு செய்கிறோம். ஆனால் இவைகள் சடங்காக மாரி விட்டது.

சடங்கு ஏற்பாடுகளில் பிரங்சிக்கப்படும் செய்திகள் மனதை தொடாத செய்திகளாக அமையும்

இப்போதெல்லாம் TVயில் ஏறக்குறைய எல்லா சேனல்களிலும் **இயேசுவை சிலுவையில் அறையும் காட்சிகள்** இயேசு **கீழே விழும் காட்சிகள்** சிந்தும் ஏராளமான **இரத்தங்கள்** இவைகளை **திரும்ப திரும்ப** எல்லா சேனலிலும் வெளியிடுவதால் ஒருவித **சலிப்பு ஏற்படுகிறது.** ஆரம்பத்தில் **ஜீசஸ்,** கருணாமூர்த்தி ஆகிய சினிமா காட்சிகளில் **இயேசுவை சிலுவையில் அறையும் காட்சி** பலரை மனம் மாறச் செய்தன. ஸ்டார் கதாநாயகனாக சினிமா **நடிகராக**

# MARCH - 2022

இருந்த AVM RAJ அவர்கள் **கருணாமூர்த்தி** சிலுவை காட்சி பார்த்து இயேசுவை ஏற்றுக்கொண்டு மிக அருமையாய் இப்போதும் ஊழியம் செய்கிறார். ஆனால் அந்த **சிலுவைகாட்சியை** தொடர்ந்து விதவிதமான கோணங்களில் அதே **சிலுவை காட்சிகளை** பார்க்க நேரும்போது நிச்சயம் **சலிப்பு** ஏற்படத்தான் செய்யும்.

**முதல்முறை** இயேசுவின் சிலுவை காட்சியை பார்த்து **அழுதவர்கள்** இப்போது **அழுவதில்லை** ஒருவித **சலிப்பு** ஏற்பட்டுள்ளது. இயேசுவின் **சிலுவை வேதனைக்கு** மரியாதை இல்லாமலே போகிறது. ஆகவே. நம்மை பரிசோதித்து நம் ஆவிக்குறிய ஜீவியத்தில் **உள்ளங்களில் இயேசுவை அழையுங்கள்** உள்ளே இயேசு வந்துவிட்டால் நீங்கள் ஆவிக்குறிய ஜீவியத்தில் தேரினவர்களாவீர்கள். அதன்பின் TVயில் சிலுவை காட்சிகளை காண நேர்ந்தால் அவர்பட்ட சிலுவை பாடகளுக்காக துதிக்கத் தோன்றும். அலுகை வராது.

கர்த்தருடைய கிருபை உங்களோடு இருப்பதாக

**– Dr. புஷ்பராஜ்**


**STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER JAMAKKARAN (FORM IV)**

| | | |
|---|---|---|
| 1. Title of the news paper | : | **JAMAKKARAN** |
| 2. Language(s) in which it is published | : | **TAMIL / MALAYALAM** |
| 3. Place of publication | : | 89,Majeeth Street, Old Suramangalam, Salem - 636 005. |
| 4. Periodicity of its publication | : | Monthly |
| 5. Printer's name | : | M.Velu |
| (whether citizen of India) | : | Indian |
| Address | : | P.M.Press 168,Arumuga Nagar, Salem-636 005 |
| 6. Publisher & Editor's name | : | **Dr.M.G.E.PUSHPARAJ** |
| (whether citizen of India) | : | Indian |
| address | | 89,Majeeth Street, Old Suramangalam. Salem-636005 |

I, **Dr. M.G.E.PUSHPARAJ** *hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

Dated : 15-3-2022
Salem - 636 005

**(Sd.) Dr. M.G.E.PUSHPARAJ**
*Signature of Publisher & Editor*

# ஊழியர் செய்யக்கூடாதவை

Bro. R. **ஸ்டான்லி**



இந்தியாவில் இந்த நாற்பது அல்லது ஐம்பது (1960-2010) ஆண்டுகளில் எழும்பியுள்ள நூற்றுக் கணக்கான ஊழியங்களுக்காய் தேவனைத் துதிக்கிறோம். இவைகளின் மூலம் **கிறிஸ்தவரல்லாத அநேகர் சுவிஷேத்தினால் சந்திக்கப்படுகிறார்கள்** என்றும் திருச்சபைகள் உயிர் மீட்சியடைகின்றன என்றும் மகிழும் அதே வேளையில் இவைகளிலுள்ள குழப்பங்களும் ஆழமின்மையும் மனவேதனையளிக்கின்றன. கர்த்தர் எனக்குக் கற்பித்து என்னோடு இடைபடுபவற்றை இங்கு பகிர்ந்துகொள்கிறேன். நான் பூரணன் என்றல்ல இந்தியாவில் நம் யாவர் மூலமும் கர்த்தரின் நாமம் மகிமைப்பட வேண்டுமென்ற ஒரே ஏக்கத்தினாலேயே இவைகளை எழுதத் துணிந்தேன்.

**I) பிற ஊழியங்களைக் காப்பி அடிக்காதீர்கள்.**

நாமெல்லாம் ஒரே தோட்டத்தில் வேலை செய்ய அழைக்கப்பட்டிருந்தாலும் தேவன் நமக்குத் தரும் பொறுப்புகள் **வித்தியாசமானவை.** கண்களாயிருக்கும்படி தேவன் சிலரை அழைத்துள்ளார். இவர்களைத் **தீர்க்கத்தரிசிகள்** எனலாம். **உடல் முழுவதும்** கண்களானால் **செவி எங்கே?** (1 கொரி 12:17). சிலர் கைகளாக, அதாவது **உதவியாளராக அழைக்கப் பட்டுள்ளனர்.** கால்கள். பாதங்கள் என்பவை **முன்னணி மிஷனரிகளைக்** குறிக்கலாம். சகோதரரே அவனவன், தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கடவன் (1 கொரி 7:24). ஓட்டத்தில் **தடம் மாறாதீர்கள்**. ஏதோ ஒருவகை ஊழியம் மக்களுக்கு மிகவும் கவர்ச்சியாசிருக்கிறதென்று **இவ்வுலக வியாபாரிகள்போல்** அதற்குள் குதித்துவிடாதீர்கள். அதைப் பொறுமை, மனவுறுதி, தீர்மானம், சகிப்பு, தைரியம் ஆகியவற்றோடு ஓடுங்கள் (எபி. 12:1). பிற ஊழியங்களிலிருந்து பயனுள்ள **பல நல்ல காரியங்களைப்** படிப்பதில் தவறேதுமில்லை. ஆனால் நம்மைக் குறித்த தேவனது

**தனித்திட்டம்** அல்லது தனிச்சிறப்பை இழந்துவிடக்கூடாது. தேவன் நம்மை செய்யும்படி அழைக்காத ஒன்றைச் செய்ய முற்படும்போது ஒரு சில ஆசீர்வாதங்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால் தேவனது உசிதத்தை இழந்துவிடுவோம். விதவிதமாயிருப்பதில் தேவன் விரும்பம் கொள்ளுகிறார். படைப்பை பார்த்து அவரது பிரியத்தைப் புகழுங்கள். **எல்லாரும் தீர்க்கதரிசிகளா?** எல்லாரும் அறப்புதங்களைச் செய்கிறவர்களா? (1 கொரி 12:29) இல்லை என்பதே எளிய பதில்.

## 2. உங்களின் வரம்பை மீறாதீர்கள்

உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல் அவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே தெளிந்த எண்ணமுள்ளவர்களாய் எண்ண வேண்டும் என்று பவுல் எழுதினான் (ரோம. 12:3). **தாலந்துகளின்** உவமையில் எல்லாருக்கும் **ஒரே எண்ணிக்கையில்** தாலந்துகள் தரப்படவில்லை. ஒருவனுக்கு ஐந்தும் அடுத்தவனுக்கு இரண்டும் மற்றவனுக்கு ஒன்று மட்டுமே கிடைத்தது. நமக்குக் **கொடுக்கப்பட்ட அளவிக்கேற்றபடியே** தேவன் கணக்குக் கேட்டபார். பிரமாண்டமான திட்டங்களைத் தீட்டுவது நல்லது. ஆனால் அவற்றை முடிக்க வசதி உண்டோ இல்லையோ என்று முன்பு உட்கார்ந்து செல்லும் செலவைக் கணக்குப் பார்க்க வேதம் போதிக்கிறது. (லூக் 14:28-30). **செலுத்தித் தீர்க்காத செலவுகளையும்,** வங்கிக் கடன்களையும் **மக்களுக்குக் காட்டி** கிட்டத்தட்ட **பிச்சை கேட்கும்** விசுவாச **ஊழியர் பலரை வேதனையோடு தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறேன்.** இது தேவனுக்கு மகிமையைக் கொண்டுவராது **தாங்கள் திரும்பத் திரும்ப கடன் பணத்தை நினைவூட்டியும் செலுத்த வேண்டிய பணத்தைக் குறித்து ஒரு பதில் கூட எழுதாமலிருக்கும் சில சுவிஷேகரைக் குறித்து இந்தியாவிலுள்ள ஒலிபரப்பு மற்றும் ஒளிபரப்புச் சங்கங்கள் வருத்தம் தெரிவிக்கின்றன.** எல்லாவற்றையும் செய்ய ஆசைப்பட்டு **இவ்விதச் சங்கடங்களுக்குள் மாட்டிக்கொள்ளக் கூடாது. ஊழிய விரிவு** தேவனது **ஆசிர்வாதம்தான்.** ஆனால் தேவனுக்கு முன்னால் ஓடுவதும் சாத்தியம். சில வேளை **நாம் தேவன் நம்மை தெளிவாக நடத்தாத உயரத்திற்குக் குறிகளை நியமித்துவிட்டு,** மக்கள் முன் நம் பெயரைக் காக்க அதையும் இதையும் செய்து திருவசனத்திற்கு ஒவ்வாத முறைகளில் வந்து முடிகிறோம்.

## 3. பிற ஊழியங்களோடு போட்டியிடாதீர்கள்.

மற்ற ஊழியங்களின் முன்னேற்றத்தைப் பார்த்து நமது ஊக்கம்கூட வேண்டும். **ஆனால் ஒரே ஆண்டவர் ஒரே இலக்கு அடையச் சேவிக்கிறோம் என்ற அறிவு வீணான**

**போட்டி மனப்பான்மையிலிருந்து** நம்மை விடுவிக்கும். இயேசுவின் மாதிரியை யோ. 4:1,2ல் கவனியுங்கள் **யோவானைவிட** இயேசு அநேகரைச் சீடராக்கித் திருமுழுக்குக் கொடுகிறாரென்று **பரிசேயர் கேள்விப்பட்டதாகக்** கர்த்தர் அறிந்தபோது, உடனே யூதேயாவைவிட்டு மறுபடியும் கலிலேயாவுக்குப் போனார் என்னே படிப்பினை! சில ஆண்டுகளுக்கு முன் அனைத்துலக மாநாடு ஒன்றில் மேலை நாட்டு ஊழியர் ஒருவர் என்னிடம் உங்கள் இயக்கத்தில் எத்தனை முழுநேர ஊழியர் இருக்கிறார்கள்? என்று கேட்டார். அப்பொழுது ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் **30 பேர் இருந்தார்கள்.** அதைச் சொன்னேன். இந்தியாவிலுள்ள இன்னொரு ஊழியத் தலைவர் என்னருகில் நின்று கொண்டிருந்நார். ஒருவரும் அவரைக் கேட்காமலேயே **எங்கள் நிறுவனத்தில் 50 பேர்** என்றார் அவர். இவ்வித எலிப் பந்தயம் நிறுத்தப்படவேண்டும். எண்ணிக்கைகளையும் சாதனைகளையும் குறித்துப் பெருமையடித்துக் கொள்வதற்கு நாம் சாக வேண்டும். பெருமை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே பெருமை பாராட்டுவானாக (எரே. 9:23, 24:1 , கொரி 1:30). அடுத்த ஊழியத்தின் வெற்றிகளில் களிக்கூரக் கற்றுக்கொள்ள வேண்டும். மகிழ்வோரோடு மகிழுங்கள் (ரோம. 12:15). சவுல் – தாவீது சரித்திரம்போல் தேவன் மூத்த ஊழியம் ஒன்றைக் கடந்து புதிய ஊழியம் ஒன்றை ஆசீர்வதிக்கலாம். ஆனால் நாம் **பொறாமைக்கு இடம் கொடுத்துக் விடக்கூடாது.** பொறாமை எலும்புருக்கி (நீதி. 14:30).

தூய ஆவியானவர் தமது விருப்பத்தின்படி ஒவ்வொவருக்கும் தமது ஈவுகளை பகிர்ந்தளிக்கிறார் (1 கொரி 12:11)

சிறிய காரியங்களிலும் உண்மையாயிருங்கள் (மத் 25:21,23).

### 4. ஒழுங்குமுறைகளை மீறாதீர்கள்

கிறிஸ்தவ வாழ்க்கையும் ஊழியமும் ஓட்டப்பந்தயம், படை, கட்டிடம் முதலியவற்றோடு ஒப்பிடப்பட்டுள்ளன. இவை யாவும் சில சட்டத் திட்டங்களுக்கும், ஒழுங்குமுறைகளுக்கும் உட்பட்டவை என நாமறிவோம். ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான் என்று பவுல் சரியாய்ச் சொன்னான் (2 தீமோ 2:5).

முடிவுதான் முறைக்குச் சட்டம் என்பதே இன்றய ஊழியச் சமுதாயத்தின் கோட்பாடாயிற்று. எதையும் எப்படியும் செய்யலாம் – மக்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க வேண்டும், பிரசங்கியாருக்கு ஆதாயமாயிருக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். இது நமது ஆண்டவரும் அவரது அப்போஸ்தலரும் போதித்ததற்கு முற்றிலும் முரண்பட்டதாகும். எந்தச்

சூழலிலும் திருமறைத் தத்துவங்களை மீறக்கூடாது. அவ்வித ஊழியத்தை தேவன் ஏற்க முடியாது. கட்டிடத்தில் நாம் பயன்படுத்தியுள்ள பொருட்களின் தரமும், தன்மையும் திருவசனமாகிய அக்கினியினால் பரிசோதிக்கப்படும் (1 கொரி 3:12,13: எரே 23:29). தங்களது எல்லா முறைகளையும், செயல்களையும் கர்த்தர் என்னிடம் சொன்னார் என்ற சூத்திரத்தில் திருமுழுக்காட்டும் ஒருவகைப் பிரசங்கிமார் இன்று தோன்றியுள்ளார். சிந்திக்கவும், நிதானிக்கவும் மக்கள் அஞ்சுகின்றனர். எழுதப்பட்ட திருவார்த்தையை தேவன் ஒருபோதும் மாற்றுகிறவரல்ல என்பதைச் சரியாய் நாம் அறிந்துக்கொள்ள வேண்டும். பணம் சேகரிப்பு முறைகளையும், ஊழிய முன்னேற்றத் திட்டங்களையும் வகுக்கும்போது திருமறையின் அடிப்படைத் தத்துவங்களை மறவாதிருப்போமாக அடுத்து **ஊழியங்களிலிருந்து சில ஊழியர் பிரிந்து போவது இன்று வாடிக்கையாகிவிட்டது** இது இன்னோரு துக்கரமான காரியமாகும். இவ்வித ஊழியக்காரரை பிற ஊழிய நிருவனங்கள் நேராகவோ, மறைமுகமாகவோ ஊக்குவிக்கக்கூடாது. தலைவர்கள் உயர்ந்த பண்பாட்டோடும், கண்ணியத்தோடும் நடந்துகொள்ள வேண்டும். பத்தாம் கட்டளை கூறுவதாவது, (யாத் 20:17). பிறர் உங்களுக்கு எதைச் செய்யக்கூடாதென்று விரும்புகிறீர்களோ அதை நீங்களும் அவர்களுக்கச் செய்யாதிருங்கள்.

**5. மிகைப்படுத்தாதீர்கள்**

உள்ளதை உள்தென்று இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் என்றார் இயேசு (மத் 5:37). தங்கள் ஊழிய செய்திகளை அறிவிக்க ஏறத்தாழ எல்லா ஊழியங்களுக்கும் பத்திரிக்கைகள் உண்டு. அறிக்கைகளில் உண்மையாயிருக்க வேண்டும். நாம் என்ன சொல்கிறோம் என்பதைவிட வாசிப்போர் மனதில் என்ன பதிக்கிறோம் என்பதற்காகவே தேவன் நம்மை நியாயந்தீர்ப்பார். **600 பேர் நமது முகாமிற்கு வந்திருந்தால்** ஏறத்தாழ 1000 பேர் என்று சொல்வது **தேவனுக்கு மகிமையைக் கொண்டுவராது.** அது **பொய்யானதால்** உண்மையில் **நாம் பொய்யனும்** பொய்க்குத் தந்தையுமான பிசாசையே கனப்படுத்துகிறோம். உமது நாமம் பரிசுத்தப்படுவதாக என்பதே கர்த்தரின் ஜெபத்தில் முதல் வேண்டுதலாகும். மிகைப்படுத்தத் திரித்துக் கூறுவதால் எத்தனை முறை அவர் நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கியிருக்கிறோம். நமது மக்களுக்கு சில ஆயிரங்களுக்கு மேல் அது லட்சம்தான் பிரசங்கிமார் இந்த அறியாமையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தக் கூடாது.

ஐந்தப்பம் இரு மீன் அற்புதத்தை நவீன பத்திரிக்கை ஒன்று வெளியிடுமானால் **ஐயாயிரத்தோடு இரண்டு பூஜ்யங்களையும்** சேர்த்துப் **புகைப்பட வித்தையினால்** அந்த

கூட்டத்தை **உண்மைபோல் காட்டியும்விடும்.** இந்திய ஊழியர்கள் அனுப்பும் **சில புகைப்படங்களைப் பார்க்கும்** மேலை நாட்டு நண்பர்கள் **இந்தியரென்றாலே தெருவோரங்களில் வசிப்பவர், பாத்திரம் ஏந்தி வீடுவீடாய்** இரப்பவர், **காட்டுமிராண்டி வனவாசிகள்** என்றுதான் நினைக்கின்றனர். **அவர்களுக்கு புகைப்படங்கள்** தேவை, **நமக்கு டாலர்கள்** தேவை. தவறான காரியங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்கிறோம், தவறான அபிப்பிராயம் கொடுக்கும் இவ்விதப் **பாவத்திலிருந்து** மனந்திரும்புவோமாக.

### 6. மனிதரைப் பிரியப்படுத்த எண்ணாதீர்கள்

பவுலின் சாட்சி பெரும் சவாலாகும், இப்பொழுது நான் மனிதரையோ, தேவனையோ யாரை நாடிப் போதிக்கிறேன்? மனிதரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனிதரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே (கலா1:10). மக்களை ஆசிர்வதிக்கவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். பிரியப்படுத்த அல்ல, **இடறுதற்கான கல்... தவறுதற்கான கன்மலை** என்று **இயேசு அழைக்கப்படுகிறார்** (ரோம 9:33). **சிலுவையைப் பற்றி வரும் இடறலைக்** குறித்து பவுல் எழுதுகிறான் (கலா 5:11). **இயேசுவைக் குறித்து இடறலடைந்தார்கள்** என்று சுவிசேஷங்களில் பலமுறை வாசிக்கிறோம் (மத் 13:57) (மாற் 6:3). ஒருமுறை அவரது சீடர்கள் அவரிடம் வந்து **பரிசேயர் இந்த வசனத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள்** என்று அறிவீரா என்றார்கள். அவர் பதிலாக என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும். அவர்களை விட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள். என்றார் (மத் 15:12-14). ஏதோ ஒரு சில செல்வந்தரையும் செல்வாக்குள்ளவர்களையும் உங்களோடு வைத்துக்கொள்ள வேண்டுமென்று சத்தியத்தை மறைக்காதீர்கள். பலராலும் போற்றப்பட விரும்பி பிரசங்கிக்கும்போது தாலாட்டாதிருங்கள். **யோவான் ஸ்நானன்** தன்னிடம் வந்த **பரிசேயர் சதுசேயருக்கு** மாலையணிவித்து **நீங்கள் எங்கள் கூட்டத்திற்கு வருகை தந்தது எங்களுக்குப் பெரும் பாக்கியம் என்று சொல்லவில்லை**. சற்றும் கவலைப்படாமல் **விரியன் பாம்பின் குட்டிகளே** என்று வரவேற்பளித்து **மனந்திரும்ப நெருக்கினான்**. சத்தியத்தைச் சொன்னதினாலே **உங்களுக்குச் சத்துருவானேனோ?** என்றான் பவுல் (கலா 4:16).

### 7. உங்களை விளம்பரப்படுத்தாதீர்கள்

அவர் **பெருகவும்** நான் **சிறுகவும்** வேண்டும் என்றான் திரு முழுக்கினன் **யோவான்** (யோவா 3:30). அவனைக் குறித்த இயேசு பெண்களிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைவிடப் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை என்றார் (மத் 11:11). அட்டை முதல்

அட்டை வரை **ஒரு தனி நபரையே விளம்பரப்படுத்தும்** சில பத்திரிகைகளைப் பார்த்துச் சலித்துவிட்டது. திரைப்பட நடிகரைப்போல **சுவிசேஷகர்** எல்லாக் கோணங்களிலும் **புகைப்படமெடுக்கப்படுகிறார்.** ஒரு பத்திரிக்கையை வாசித்தப்பின் அல்லது ஒரு செய்தியைக் கேட்டபின் **நமது இரட்சகர் எவ்வளவு அதிசயமானவர் என்று தான் பிரமிக்க வேண்டுமே** தவிர இவர் எவ்வளவு **வல்லமையான பிரசங்கியார்** என்று விமர்சிக்க வழியிருக்கக்கூடாது. அப்படியே **ரெவரண்டு ரைட் வெரண்டு** போன்ற பட்டங்களையும் அகற்றுங்கள். **ரெவரண்டு** என்ற **ஆங்கில வேதாகமச் சொல்** தமிழில் **பயங்கரமான** என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. **கர்த்தருடைய நாமமே** பரிசுத்தமும் **பயங்கரமுமானது**.(சங் 111:9). மிகப் பெரிய **இந்திய அப்போஸ்தலரில்** ஒருவர் எளிய முறையில் **சகோதரன் பகத்சிங்** என்றே அழைக்கப்பட்டார். நீங்கள் எல்லாரும் **சகோதரராயிருக்கிறீர்கள்** என்றார் **இயேசு** (மத் 23:8). ஐம்பது அல்லது நூறு ரூபாய்க்கெல்லாம் **டாக்டர் பட்டம்** கொடுக்கும் நிறுவனங்கள் உண்டு. **பட்டங்கள்** அவ்வளவு மலிவாகிவிட்டன.

## 8. பணக் காரியங்களில் சந்தேகப்படத்தக்கவராயிராதீர்கள்

இந்த **மிகுதியான தர்மப் பணத்தைக் குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாத படிக்கு** நாங்கள் எச்சரிக்கையாயிருந்து, கர்த்தருக்கு முன்பாக மட்டுமல்ல **மனிதருக்கு** முன்பாகவும் **யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்** என்றான் பவுல் (2 கொரி 8:20,21). சில சபைகளில் **தசமபாகம்** என்ற பெயரில் **மேய்ப்பர்களால்** வாங்கப்படும் மிகுதியான பணத்துக்கக் **கணக்கு காட்டப்படுவதில்லை.** கணக்குக் காட்டப்படாத பணம் **கறுப்புப் பணமாகும். கணக்கு விபரம் பரிசீலனை செய்யப்பட்டு அரசுக்குச் சமர்பிக்கப்பட வேண்டும்** என்பதை இந்திய ஊழியங்களின் ஐக்கியம் (Indian Mission's Association) தன்னில் அங்கமாயிருக்கும் **நிறுவனங்களுக்கு ஒரு நிபந்தனையாக நியமித்துள்ளது. பொதுப் பணத்தைக் கையாளும் நமக்கு இவ்விதக் கட்டுப்பாடு தேவை.** தனது **மனைவி** அல்லது ஓர் **இனத்தாரைப் பொருளாளராக** வைக்கும் பழக்கத்தை ஊழியர்கள் அகற்ற வேண்டும். **மக்களால்** தெரிந்தெடுக்கப்பட்ட **நற்சாட்சியுள்ள ஏழு பேரைப் பணக்காரியங்களுக்கும்** அடுத்த பொறுப்புகளுக்கும் **அப்போஸ்தலர் நியமித்தனர்** (அப் 6:3). இதோ **பில்லி கிராமின் சாட்சி** எங்கள் ஐக்கியக் குழுவின் பணக் காரியங்களெல்லாம் **ஒரு தனி நிர்வாகக் குழுவினர் கையில் உள்ளது.** இப்பகுதியில் எனக்கு **எந்த ஆளுகையும் கிடையாது.** எங்கள் ஊழியத்திலுள்ள மற்ற சுவிசேஷகர்களைப் போலவே நிர்வாகக் குழு எ**னக்கும் ஒரு சம்பளம் தருகிறது.** அதை தவிர்த்து வேறு **காணிக்கைகளை** நான் ஏற்றுக்கொள்வதில்லை. எங்கள் **கணக்கு விபரங்களெல்லாம்** தணிக்கை செய்யப்பட்டு **எங்களைத் தாங்குவோருக்குத் தெளிவாக அறிவிக்கப்படுகிறது.** இவ்விதமாய்ச் **சாட்சிப்**

**பகரக்கூடிய** பல இந்திய ஊழயருக்காய்த் தேவனைத் துதிக்கிறோம். பண விஷயத்தில் உங்கள் கரங்கள் சுத்தமாயிருக்கின்றனவா என ஆராய்ந்து பாருங்கள்.

### 9. தன்னலமாயிராதீர்கள்

**உடலிலே** பிரிவினையுண்டாயிராமல், **உறுப்புகள்** ஒன்றைக் குறித்து ஒன்று **கவலையாயிருக்கும்படிக்கு** தேவன் இப்படி உடலை அமைத்திருக்கிறார் (1 கொரி 12:25). **அவனவன் தனக்கானவைகளையல்ல,** பிறருக்கானவைகளையும் நோக்குவானாக (பிலி2:4). **பிற ஊழியங்களுக்கு** உதவிசெய்ய வாய்ப்புகளை நாடுங்கள். உங்கள் ஆசிர்வாதங்களையும், அறிவையும் அவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். **யார் குத்தினாலென்ன, நெல் அரிசியானால் போதுமே!** அப்படியே **உங்கள் ஊழியத்திலும்** உங்களையும் உங்கள் **குடும்பத்தையுமே முன்னுக்கு நிறுத்த** முயற்சிக்காதிருங்கள். **மற்றவர்களுக்கு** நிறைய **வாய்ப்புகள்** கொடுத்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவர உழைத்திடுங்கள். மேலும் நாம் வயதாக வயதாக வாலிபர் எழுந்து நமக்கு முன்பாகச் சிலம்பாட்டம் பண்ணட்டும் (2 சாமு 2:14). நாம் சாவதற்கு அவர்கள் காத்திருக்கக் கூடாது **தலைமைப் பொறுப்புகளை** அவர்கள் **எடுக்கட்டும்,** நாம் பின்னணியிலிருந்து எப்பொழுதும் ஆலோசனை தரலாமே !

### 10. துர்ச்செய்திகளைப் பரப்பாதீர்கள்

**மதிக்கெட்டவன்** பிறனை அவமதிக்கிறான்: **புத்திமானோ** தன் வாயை அடக்கிக் கொண்டிருக்கிறான். **புறங்கூறித் திரிகிறவன்** இரகசியத்தை வெளிப்படுத்துகிறான். **ஆவியில் உண்மையுள்ளவனோ** காரியத்தை அடக்குகிறான் (நீதி 11:12,13). ஏதாவதொரு ஊழியக்காரனைக் குறித்துத் **தீமையானதொன்றைக் கேள்விப்படும்போது,** அவருடைய சீர்திருத்தத்திற்காகக் **கிருபாசனத்தண்டையில் மன்றாடவும்,** தனித்து அவருக்கு ஆலோசனை சொல்லவும் மட்டுமே நமக்க உரிமையுண்டு. **துர்வுபதேசங்கள், வேத புரட்டல்கள், திருமறைக்கு** மாறான செயல்முறைகள் ஆகியவற்றை **கண்டித்து,** ஆள் சார்ந்த அல்ல பொருள் சார்ந்து **மக்களை எச்சரிக்க வேண்டியது அவசியம்.** ஆனால் **பீடத்தையோ விரசங்களையோ** தனி நபரைத் **தாக்கப் பயன்படுத்தக் கூடாது.** சவுல் மரித்தபோது **தாவீது பெலிஸ்தியரின் குமாரத்திகள்** சந்தோஷப்படாதபடிக்கும், **விருத்தசேதனம்** இல்லாதவர்களின் குமாரத்திகள் களி கூராதபடிக்கும், அதைக் **காத் பட்டணத்தில்** அறியாமலும் **அஸ்கலோனின்** வீதிகளில் பரப்பாமலும் இருங்கள் என்றான். (2 சாமு 1:20). இரண்டு வசனங்கள் நல்ல முடிவுரையாய் அமைக்கின்றன. **நாம் எல்லாரும் அநேகக் காரியங்களில் தவறுகிறோம் அன்பு திரளான பாவங்களை மூடும்.** (யாக் 3:2, 1 பேது4:8)

ஊழியங்கள் வளரட்டும் ஊழியங்கள் மிளிரட்டும்

உன்னதர் மகிமைப்படட்டும்

# பூமிவாழ்வு நமக்குச் சொந்தமில்லையா?

ஆவிக்குரிய சபைகளிலே **எனக்கென்று எதுவுமில்லை: இப்பூமி சொந்தமில்லை** என்கிறார்கள். இந்தப் பூமி வாழ்வு கஷ்டமான கண்ணீர் நிறைந்த வாழ்வு : பரலோக வாழ்வுதான் நித்தியமானது. எனவே அதைத்தான் நாம் விரும்பவேண்டும் என்று சொல்வோருமுண்டு. இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை உள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாய் இருப்போம் என்று போதிப்பவர்களும் உண்டு. அப்படியானால் இந்த பூமியை தேவன் ஏன் படைத்தார்? ஆதாம் ஏவாளை ஏன் படைத்தார்? இயேசு ஏன் பூமிக்கு வந்து மரித்தார்? இஸ்ரேலருக்கு கானான் தேசம் எதற்கு? 1000வருட ஆட்சி எதற்கு? ஏதேனில் ஜீவவிருட்சத்தின் கனி எதற்கு? ஆவியானவர் இந்த கருகலான சத்தியத்தை விளக்குவராக.

**இரட்சிக்கப்படாதவன் பாடுகிறான்:** உலகம் பிறந்தது எனக்காக என்று ஏசா 45:18 சொல்கின்றது. வானமும் பூமியும் படைத்தது குடியிருப்புக்காக என்று அப்படிப்பட்ட இந்த பூமி எனக்குத்தானே ஆதி 1:28ல் நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி ஆண்டுகொள்ளுங்கள் என்று மனிதனிடம் சொன்னதன் அர்த்தமென்ன? மனிதன் இந்த பூமியில் வாழப்பிறந்தவன்: ஆளப்பிறந்தவன். இந்த பூமி முழுவதும் மனிதனுக்கே சொந்தம். இந்த மனிதன் இந்த பூமியிலே வாழவேண்டும் என்று தான் ஜீவவிருட்சத்தின் கனியை ஏதேனில் கொடுத்தார்.(ஆதி 2:9). ஆதாம் பாவம் செய்தான்ப் விரட்டப்பட்டான், மரணம் என்ற தண்டனை பெற்றான். (ஆதி 3:19) தனக்குச் சொந்தமான பூமியை பிசாசுக்கு ஒப்புக் கொடுத்தான் (லூக் 4:6).

இந்த பூமிக்கு அதிபதியானான் பிசாசு. தேவன் நரகம் தருவார் என்று உணர்ந்த பிசாசு மனிதனுக்குள் பாவம் , சாபம் பெருகப் பண்ணி, வியாதி, வறுமை, தற்கொலை, கொலை, ஆக்ஸிடெண்ட் போன்ற அகால மரணமாகிய கூரை (Sharp) உருவாக்கினான் (ரோ 5:12: 1கொரி 15:57). இந்த பிசாசின் கிரியைகளை ஒழிக்கவும் (1யோ 3:8), இழந்து போனதை திரும்ப மனிதனுக்கு கொடுக்கவும் (லூக் 19:10, மத் 28:18-20), பிசாசின் அகால மரணத்தை சிலுவையிலே ஜெயிக்கவும் (எபி. 2:15), மனிதர்களுக்கு அந்த மரணமும், மரண பயமும் இல்லாதபடி செய்யவும் (கொலோ 2:14,15) இயேசு பூமிக்கு வந்தார். ஆக நம் தேவனின் எண்ணமெல்லாம் ஏக்கமெல்லாம், இந்த பூமியில் நாம் நீடித்து சுகமாய் வாழவேண்டும்: விழுந்து போன பிசாசுக்கு முன்னாலேயே அவரைத் துதித்து ஆராதிக்க வேண்டும்(ஏசா 43:21) பக்தியுள்ள சந்ததியை பெற வேண்டும் என்பது தான் (மல் 2:15)

**பலர் சொல்வது: இப்பூமியில் ஊணடித்த ஆயுள் வாழ விரும்புபவன் உலகத்துக்குரியவன்: மாம்சத்துக்குரியவன்: பரலோகத்திற்கு சொந்தக்காரனல்ல.** அப்படியானால் சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியை சுதந்தரித்துக்

கொள்வார்கள் என்று மலைப்பிரசங்கத்தில் (மத் 5:5)இயேசு சொன்னது என்? கானானைத் தந்து அவர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்தது ஏன்? சங் 91:16 ஏன்? Thou Shalt be prosperth and be in good health என்று 3 யோ. 2ல் சொல்லியது ஏன்? மரித்த 3 பேரை உயிர்த்தெழச் செய்து வாழச்செய்து வாழ வைத்தது ஏன்? தானே உயிர்த்தெழுந்து வந்தது ஏன்? தேவசித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலே செய்யப்படுவதாக (மத் 6:10) என்று சொன்னது ஏன்? இந்த பூமி அழிப்பதற்கா உருவாக்கப்பட்டது. அப்படியானால் பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது Olam, Heb. என்று பிர 1:4ல் சொன்னது பொய்யா? ஆதியிலே (ஆதி 1:1- date-less past) படைக்கப்பட்ட பூமி 2 பேது 3:5,6 ன் படி ஜலப்பிரளயத்தில் அழிந்தும் பிற்பாடு புனரமைக்கப்பட்ட நாம் வாழும் இந்த பூமியாய் இருக்கிறதே பரலோகத்திற்கு இரகசிய வருகையில் போனாலும் 7 வருஷம் இருந்துவிட்டு மீண்டும் இந்த பூமியில் வந்துதான் 1000 வருடம் ஆள்வோம்: இது அக்கினிக்கு இரையாக்கப்பட்ட பின்பும் இந்த பூமி இன்னொரு நிலையில் புதிய பூமி என்ற பெயரில் இருக்குமே (2 பேது 3:10- pased away = pass from one condition from another - pamerchomai - G.K.). அதே இந்த பூமியில் தானே நமது புதிய எருசலேமும் நித்தியம், நித்தியமாய் இருக்கும் நித்திய ஜீவன் தேவன் தந்தார் என்று சொல்லி பெருமைப்படும் நாம், அந்த நித்திய வாழ்க்கை பரலோகில் அல்ல என்றும் தேவன் நமக்காய்ப் படைத்த இதே பூமியில் ஒரே தேவனோடு வாழும் வாழ்க்கை என்றும் முதலில் உணர வேண்டும். நித்திய ஜீவன் என்றால் பரலோக வாழ்க்கை என்று அர்த்தமல்ல. உண்மை இப்படியிருக்க நமக்காக படைக்கப்பட்ட இந்த பூமியை தரக்குறைவாய் நினைப்பதும் இந்த பூலோக வாழ்வு தேவையில்லை என்று சொல்வதும் நீடுத்தநாள் வாழ்வு இப்பூமியில் இல்லை என்று அவிசுவாச வார்த்தை சொல்வதும் வேதத்திற்கு விரோதமானது அல்லவா தேவ பக்திக்கு மாறான அக்கிரமம் அல்லவா அது பிசாசின் செயல்பாடு அல்லவா சிந்தியுங்கள்.

எபி 11ல் சொல்லப்பட்ட விசுவாச வீரர்களெல்லாம் பரலோகத்தை நாடித் தானே வாழ்ந்தார்கள் என்று சிலர் சொல்லலாம். உண்மைதான் எபி. 11:10ஐ வாசியுங்கள். தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் (ஆபிரகாம்) காத்திருந்தான். இந்த நகரத்தைப் பற்றித்தானே இயேசு யோ 14:2,3ல் சொன்னார். அந்த வாசஸ்தலம்தானே – அந்த நகரம்தானே பரம எருசலேம் புதிய எருசலேம். அது தானே புதிய பூமியில் இறங்கிவரப் போகிறது (வெளி 21:10). இதில்தானே நாம் நித்தியம் நித்தியமாய் வாழப் போகிறோம், ஆளப்போகிறோம். ஆக ஆதிமுதல் வாழ்ந்த பரிசுத்தவான்களுக்காகத்தான் இந்த பூமி என்ற சத்தியத்தைப் புரியவிடாமல் பிசாசு தடை செய்கிறான், தடையை உடைப்போம் இயேசுவின் நாமத்தினாலே

படைத்தவரைப் புகழ்வோம் படைப்புக்களை மதிப்போம் நித்திய நித்தியமாய் நரகம் போய் அழியாத படிக்கு அவரோடு இப்பூமியில் நித்திய நித்தியமாய் அவர் செய்த செய்து கொண்டிருக்கிற செயல் பாடுகளுக்கு வந்தனம் செயய்வோம். இயேசு சீக்கிரம் வருகிறார். ஆயத்தமாவோம் ஆயத்தமாக்குவோம் அகால மரணமில்லா வாழ்வை அனுப்விப்போம் இப்பூமி வாழ்வு நமக்கு சொந்தமானதே

## தெரிந்துக்கொள்ளுங்கள்

# சபைக்கு திருமணம் ஆகிவிட்டதா ?

இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம்தான் சபை (அப் 2:47). சபையை ஸ்திரி என்ற ஸ்தானத்தில் வேதம் கூறுகிறது. கிறிஸ்து, மணவாளன் என்றும், சபை மணவாட்டி என்றும் கணிக்கிறது. 1 பேது 3:21ன் படி இரட்சிக்கப்பட்டு முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தவர்கள் எல்லாம் நிச்சயிக்கப்பட்டுவிட்டார்கள் (Betrothel). **நம் வேதம் இஸ்ரேலிய கலாச்சாரப்படி** இருப்பதால் **இஸ்ரவேலின் முறைமைப்படி** நிச்சயிக்கப் பட்டவர்கள் **கணவன் மனைவி** ஆகிறார்கள். உதாரணத்திற்கு **யோசேப்பு- மரியாள்**. தற்கால தமிழர் கருத்துப்படி மாலைமாற்றியோ, **தாலி கட்டியோ,** வேதம் மாற்றியோ **மோதிரம் மாற்றியோ** சடங்குகள் நடந்தால்தான் **திருமணமானது என்று பொருள்**. நம் **வேதம் சொல்வதைப் பார்ப்போம்.**

1. இயேசுவே தன்னை **மாப்பிள்ளை**–Bridegroom என்று சொல்வதால் **திருமணமானால்தான்** இது சரியாகும் (மத் 9:15., மாற் 2:19,20,. லூக் 5:34,35)
2. Bridegroom என்பதற்கான கிரேக்க வார்த்தை NHNUMAHIOS அதன் பொருள் A newly married man அதாவது **புதிதாய் திருமணமானவன்.** நம் ஊரில் கூட இப்படிபட்டவர்களை மாப்பிள்ளை **மணமகன்** என்று தானே கூறுவார்கள். யோவான்ஸ்நானன்கூட **இயேசுவை மாப்பிள்ளை** –bridegroom மணவாளன் என்று தான் அழைக்கிறான் (யோ 3:29).
3. **பழைய ஏற்பாட்டின்படி இஸ்ரேலர்கள் தேவனுக்கு திருமண மானவர்களாய் இருப்பதுபோல (ஓசி 2) புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்கு திருமணமானவர்களாய் கிறிஸ்தவர்கள்** இருக்கிறோம் (மத் 26:28,. லூக் 22:20., 2 கொரி 3,. எபி 12:24)
4. **புது உடன்படிக்கையின்படி இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லோரும்கிறிஸ்துவோரு மணமாகி விட்டார்கள் என்று பவுல் கூறுகிறார்** (ரோ 7:1-6)

5. எபி 11:39,40ன் படி பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் நம்மையல்லாமல் பூரணராக மாட்டார்கள். எப்போது பூரணராவார்கள்? புதிய எருசலேமில் **ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாய் இருக்கும் நம்மோடு (வெளி 21:9) இணைந்து வாழும்போது**
6. வெளி 22:16,17ன் படி **பூமியில் வாழும் விசுவாசிகள் எல்லாரும் இயேசுவின் மணவாட்டி பொண்ணு** Bride
7. 1கொரி 11:3 ,. 12:12-28: எபே 4:12-16: 5:25-33 போன்ற வசனங்களில் **இயேசுவையும் சபையையும்** மையப்படுத்தி **கணவன் மனைவி** குடும்ப உறவுகளை பவுல் எழுதியிப்பதால், **கிறிஸ்தவர்கள்- கிறிஸ்தவ சபை கிறிஸ்துவோடு திருமணமானவர்கள் என்பது உறுதியாகிறது.**
8. **கணவன் - மனைவியாயிருக்கும் சபைக்கும்** கிறிஸ்துவுக்கம் ஆட்டுக்குட்டியானவரின் **கல்யாண விருந்து பரலோகில் இஸ்ரேலிய கலாச்சாரப்படி நடக்கும்** (2 கொரி 11:1-21:வெளி 19:1-10) ஆமென்.
9. **பழைய உடன்படிக்கை இஸ்ரேல் மக்களுக்குத்தானே. அப்படியே புது உடன்படிக்கையும் அவர்களுக்கே** அப்படியானால் புது உடன்படிக்கைக்காரர்கள் யாராயினும் பழைய அதே **கணவன் மனைவி** உறவுதானே இருக்கும். ஏசா 56:6,7,.எரே 50:5.

குறிப்பு: தமிழ்நாட்டுப் பண்பாட்டில் திளைத்திருப்பவர்களுக்கு, மேலே சொல்லப்பட்ட காரியங்களை அவ்வளவு சுலபமாக புரிந்து கொள்ள முடியாது: நானும்கூட ஆரம்ப நாட்களில் அவர்களைப்போலத் தான் இருந்தேன். **இஸ்ரேலர் பண்பாட்டுப்படி நடந்தாலும், நமது பண்பாட்டுப்படியும் நடக்கும்** என்றும் நம்பி இருந்தேன். We know Revelationis progressive கற்றுக் கொள்கிறவன்தான் ஆசிரியன்.

- ☐ ஜாமக்காரன் கிடைக்காவிட்டால் உடனே **உங்கள் விலாசத்தை** குறிப்பிட்டு **தொலைபேசி எண்களையும்** குறிப்பிட்டு எழுதுங்கள். உடனே உங்களுக்கு Speed Postல் ஜாமக்காரனை அனுப்பிவிடுகிறோம்.
- ☐ உங்கள் **காணிக்கைகள்** யாவும் கிடைத்தது மிக்க நன்றி.
- ☐ இந்த முறையும் **ஜனவரி, பிப்ரவரி, மார்ச்** மூன்று மாத ஜாமக்காரனை ஒன்றாக இணைத்து அனுப்புகிறோம்.

# ஆரம்ப கால சாட்சி

**Dr. லில்லியன் ஸ்டான்லி,** M.B.B.S., D.C.H.,



**Dr.** லில்லியன் ஸ்டான்லி ஆகிய நான் எனது சொந்த சாட்சியை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். எனக்குத் திருமணமானபோது குடும்பச் சொத்து அதிகம் கிடைக்கவில்லை. ஆகவேதான் முழுநேர இறைப் பணியைத் தெரிந்து கொண்டபோது **அதிகம் கஷடப்பட்டோம்**. செலவினங்கள் எல்லாவற்றையும் **குறைத்தோம் - துணிமணிகள்** வாங்குவதோ, **வெளியே** போவதோ, உணவோ சாதா இரயிலில் சாதாரண வகுப்பில்தான் ஊழியப் பயணம் செய்தோம். A.C.**குளிர்சாதன** இரயில் பெட்டியை நான் **எட்டிப்பார்த்ததும் கிடையாது.** கிராம ஊழியத்தில் **பழைய செய்தித்தாள்களை நடைமேடையில் விரித்து** மாறி மாறித் தூங்குவோம். மேலும் **கிடைத்த இடத்தில் தங்குவோம்.** கொடுத்த உணவை குறையேதும் கூறாமல் உண்போம். இப்படிப்பட்ட எங்கள் ஊழியம் மூலம் மக்கள் **ஆசீர்வதிக்கப்பட்டனர்.** மாற்றமும் துவங்கியது.

2019ல் **ஐக்கிய அரபு நாடுகளுக்கு** ஊழியமாய் சென்றபோது **ஷெல்டன் ஹோட்டலில்** (ஸ்டார் ஹோட்டலில்) தங்கவைக்கப்பட்டோம். அந்த கிருபையை நினைத்து ஆண்டவரைத் துதித்தேன். அப்பா தனது 91வயதில் மரித்து எனக்கொரு சொத்தை விட்டுச்சென்றார். **அதை விற்று** என் கணவர் என் பெயரில் பணத்தை வங்கியில் போட்டுத்தந்தார்.

வங்கியில் பணம் உண்டு என்று அறிந்ததும் எனக்குத் தலை கால் புரியவில்லை. இனி நான் என் விருப்பப்படி **செலவழிக்கலாம்,** மற்ற **ஊழியங்களுக்குக் கொடுக்கலாம், ஏழைகளுக்கு** உதவலாம், **கணக்கு பார்க்காமல்** வேண்டியதை வாங்கலாம்... இப்படியெல்லாம் நினைத்து சந்தோஷப்பட்டேன். சில வருடங்கள் மகிழ்வாய் உருண்டோடின. ஒருநாள் மாற். 10:17 மத். 19:20ல் வாலிபன் ஒருவன் ஓடிவந்து நித்திய ஜீவன் சுதந்தரிக்க நான் என்ன செய்ய வேண்டும் என்றான். அதற்கு இயேசு சொன்ன பதில் உனக்கு உண்டான கைகளையெல்லாம் விற்றுவிடு என்றார். அதன்பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றி வா என்றார். ஒரு நாள் நான் இந்த வாலிபனைக் குறித்து தியானித்துக் கொண்டிருந்தபோது கடவுள் என்னிடம் கேட்டார். வங்கியில் உள்ள உன் **தொகையை** விட்டுவிட்டு என்னைப் பின்பற்றுவாயா ? தூக்கிவாரிப்போட்டது! எப்படி ஆண்டவரே? பரம்பரை சொத்தை நானாக கொடுத்துவிட முடியாதே ! எங்கள் குடும்ப மருத்துக்கும் **சிறு செலவுகளுக்கும்** கையேந்தி நிற்க முடியுமா? என் **சுதந்திரம்** பறிபோய்விடுமே! புலம்பினேன்.

**என்னை நீ நம்ப முடியுமானால்** வங்கி பணத்தை கொடுத்துவிடு என்றார் ஆண்டவர். படுக்கையில் புரண்டேன். முடிவாக, **சரி ஆண்டவரே என்று தலை வணங்கினேன்.**

தன் ஒரே பேரான மகனை பலியிடும்படியாக இறைவன் ஆபிரகாமுக்குப் பணிந்தார். **ஆபிரகாமுக்கு இரவெல்லாம்** தூக்கமிருந்திருக்காது. அவருக்கு உலகில் எல்லாமே **ஈசாக்குதான். இறைவனது விருப்பப்படி ஈசாக்கைக் கொடுக்கத் தீர்மானித்தார்.** ஒருவேளை கடைசி நிமிடத்தில் கர்த்தர் தன்மனதை மாற்றலாமே! எதற்கும் ஒரு ஆட்டையும் கையில் எடுத்துச் செல்கிறேன் என்று அவர் நினைக்கவில்லை. **தீர்மானத்தில் உறுதியாயிருந்தார்.** ஈசாக்கை வெட்ட ஆபிரகாம் ஓங்கிய வாள் தொடுமுன் கர்த்தர் **ஆபிரகாமை நிறுத்தினார்.** ஆபிரகாம் **தன் மகனைதிரும்ப பெற்றார்.** ஆனால் ஆபிரகாம் **தன் மகனோடு** கொண்டிருந்த **உறவில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது.** ஈசாக்கு இனி அவருடையவன் அல்ல. அவன் ஏற்கனவே **இறைவனுக்கு படைக்கப்பட்டுவிட்டான்.** அவரது மனம் **ஈசாக்குலிருந்து** எடுக்கப்பட்டுவிட்டது. **இதுதான் எனக்கும் நடந்தது. பணம் எனக்கே திரும்பி வந்தது.** ஆனால் **பணத்தைப் பற்றி என் மனப்போக்கு** 100% மாறியது. **அது இனி எனதல்ல.** தொடர்ந்து பயன்படுத்தினேன். ஆனால் என் மனது அந்த பணத்தில் இல்லை. இதற்கு முன் அதைப்பற்றியே யோசித்துக்கொண்டிருப்பேன், **திட்டமிடுவேன்,** வட்டிகணக்கிட்டுக் காத்திருப்பேன். அதெல்லாம் இப்போது செத்துப்போனது. சொல்லப்போனால் **நான் அப்பணத்திற்கு செத்துப்போனேன். தியாகம்** செய்யும் அனைவருக்கும் **அது திரும்ப கிடைப்பதில்லை,** ஆனால் **தேவன் இருதயத்தை பார்க்கிறார்,** பணம், பொருள் மட்டுமல்ல, உங்களால் **கடவுள் கையில் விட்டுக்கொடுக்க** முடியமாலிருப்பது **ஒரு நபராகவோ** எதுவாவோ இருக்கலாம். அதை முழுவதுமாய் விட்டுக்கொடு.

அவ்விளைஞன் **விண்ணரசை எட்ட மாட்டான்** என்று இயேசு சென்னது சீடரிடையே **அதிர்வலைகளை** ஏற்படுத்தியது. பிள்ளைப் பருவத்திலிருந்தே எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்த அந்த வாலிபன் **நித்திய வாழ்வை சுதந்தரிக்காவிட்டால்** யார்தான் சுதந்தரிப்பார்? இயேசு சொன்னார் **மனிதரால் இது கூடாததுதான்: தேவனால் எல்லாம் கூடும்.** (மத். 19:26) எதற்காகச் சொன்னாரோ ஆனால் **அதைத்தவிர** மற்றெல்லாவற்றிக்கும் **இவ்வாக்கை உரிமை கொண்டாடுகிறோம்.** கடவுள் **விடச் சொல்லும் ஒன்றை** விடமுடியாமல் தவிக்கும் அந்த ஒருவருக்காகவே இயேசு இதைச் சொன்னார். இவ்வாலிபனின் **விரல்கள்** அவனது **சொத்துக்குள் புதைந்திருந்தன.** இயேசுவே இதை விட்டுவிட எனக்கு உதவி செய்யும் என்று கேட்டிருப்பானானால், இயேசு நிச்சயம் **உதவி செய்திருப்பார்.** இயேசு உதவிசெய்துவிடுவாரோ அப்படி உதவி செய்தால் அப்போது சொத்தை இழக்க வேண்டி வருமே என்று பயந்து அவன் உதவி கேட்கவில்லை– நம்மில் எத்தனை பேர் இப்படி ஜெபிக்க **துணிச்சல்** கொள்வோம். ? இயேசு மறுபடியும் சொன்னார், பணக்காரர் இறையாட்சிக்கு உட்படுவதை விட **ஊசியின் காதில்** ஒட்டகம் நுழைவது எளிது, (மத் 19:24) திரும்பச் சொல்வது அழுத்திக்கூறுவதாகும். **மெய்யாகவே** சொல்கிறேன் என்றார். இயேசு (வச. 23) உண்மையுள்ளவர் என்பதை நம்பி செயல்படுவோம்.

# ஜாமக்காரன் பத்திரிகை ஊழியத்தின் நோக்கம்

**1) அறிவிப்பது 2) எச்சரிப்பது**

**1) காவல் கோபுரத்தில்** உள்ள **(காவல் காரன்) ஜாமக்காரன்** (Watchman) **வெளியிலிருந்து வரும்** ஆபத்தை நாட்டு மக்களுக்கு **அறிவிக்க** வேண்டும்.

**2)** காவல் கோபுரத்திலிருந்து **நாட்டுக்குள் நடக்கும் ஊழல்,** பாவங்கள் யாவையும் **நாட்டு மக்களுக்கு** அறிவித்து எச்சரிக்க வேண்டும். லேவி 5:12 இதுதான் கர்த்தர் எனக்கு கொடுத்த ஜாமக்காரன் என்ற பத்திரிகை ஊழியம்.

அதோடு வசனம் மூலமாக யார் **உண்மையான** ஊழியன், கள்ள ஓநாய், **கள்ள தீர்க்கதரிசி** இவர்களை இனம்கண்டு மக்களுக்கு எச்சரிக்க வேண்டும். (இந்த ஜாமக்காரனை கடந்த **52 வருடங்களாக** நடத்துகறேன். (வாசகர்கள் மட்டுமல்ல) **எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு அவரையே** (இயேசுவையே) **நாங்கள் அறிவித்து** (ஜாமக்காரன் வாசகர் மட்டுமல்ல) **எந்த மனுஷனுக்கம் உபதேசம் பண்ணுகிறேன்**(றோம்) **அதற்காக நான் எனக்குள்ளே.... கிறிஸ்துவின் பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்.** கொலோ 1:28. இந்த பத்திரிகை ஊழியத்தை தாங்குகிற ஜெபிக்கிற எல்லாருக்கும் இந்த ஊழியத்தின் ஆசீர்வாதத்தின் பங்கு நிச்சயம் உண்டு.

இரட்சிக்கப்பட்டு **வேதத்தை வாசித்து** தியானிப்பவர்களுக்கு மட்டுமே **நான் எழுதும்** கருத்துக்கள் விளங்கும்.

**- Dr. புஷ்பராஜ்**

**MARCH-2022**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.